# கோவிட்-19/ COVID-19

வாடகைக் குடியிருப்பாளர்களுக்கான புதிய செய்தி

Toronto Community Housing

ஏப்ரல் 27, 2020

## உங்கள் வாடகையைச் செலுத்துதல்

COVID-19 அவசரகால நிலைமையின் போது ரொறோன்ரோ சமூக வீடமைப்பு, **நேரடியாக வந்து வாடகை செலுத்துவதை ஏற்றுக் கொள்ள மாட்டது** என்பதுபற்றிய ஒரு ஞாபகப்படுத்துகை. ஒவ்வொரு மாத முதலாம் திகதிக்குரிய வாடகையைச் செலுத்த உங்களுக்குப் பலவித தெரிவுகள் உள்ளன.

**காசோலை மூலம் செலுத்துதல்.** உங்கள் காசோலை "Toronto Community Housing" என்ற பெயருக்கு வரையப்பட்டு உங்கள் குடியிருப்பாளர் கணக்கு இலக்கத்தை அடிக்குறிப்பில் (memo) கொண்டிருக்க வேண்டும். உங்கள் காசோலையை நீங்கள் ரொறொன்ரோ சமூக வீடமைப்புக்கு பின்வருமாறு வழங்கலாம்:

> **போட்டுவிடும் பெட்டி (Drop box).** உங்களது காசோலையை அல்லது காசுக் கட்டளையை உங்கள் கட்டட மேலதிகாரி அலுவலகத்தில் அல்லது உள்ளூர் செயற்பாட்டு அலகு அலுவலகத்தில் உள்ள பெட்டியில் போட்டுவிடுங்கள்.
>
> **தபால்:** மாதத்தின் முதல் தேதிக்கு முன் கிடைக்கவும் செயன்முறைப்படுத்தவும் அவகாசம் அளித்து 3 முதல் 5 வேலைநாட்கள் முன்னதாக உங்கள் செயற்பாட்டு அலுவலகத்திற்கு ஒரு காசோலையைத் தபாலில் அனுப்பி வையுங்கள்.

**இணையவழி வங்கிச்செயல்பாடு மூலமாகச் செலுத்துதல்: "Toronto Community Housing Corporation"** என்பதைப் பெறுநராகச் சேர்த்த பின்னர் உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து நேரடியாகக் கட்டணத்தைச் செலுத்துங்கள்.

**தொலைபேசிவழி வங்கிச்செயல்பாட்டுத் தொகுதி மூலமாகச் செலுத்துதல்:** நேரடியாக உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து வாடகையை தொலைபேசி மூலமாகச் செலுத்த முடியும்.

**முன்னரே அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் செலுத்துமுறையைப் (PAP) பாவித்து செலுத்துதல்:** ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதியன்று உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து வாடகையை **Toronto Community Housing** க்கு அனுப்பும்படி ஒப்புதல் அளித்து வையுங்கள்.

இந்தத் தெரிவுகள்பற்றி மேலும் அறிவதற்கு அல்லது ஒரு **(PAP)** படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சேவைபெறுநர் பராமரிப்பு நிலையத்தை **416 981-5500** இலக்கத்தில் அல்லது **help@torontohousing.ca** மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது **torontohousing.ca** என்ற இணையத்தளத்தில் **(PAP)** படிவங்களைத் தரவிறக்கம் செய்தும் கொள்ளலாம்.

இந்த அறிவித்தலை வேறொரு மொழியில் அல்லது வடிவத்தில் பெறுவதற்கு அழையுங்கள்: **416-981-5500.**